# தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்
03.01.2013 A.M

## "மா'வில் சாம்பல் நோயை கட்டுப்படுத்துவது எப்படி?



தமிழகத்தில் சுமார் 80 ஆயிரம் ஹெக்டரில் மா சாகுபடி செய்யப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 40 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மாவட்டத்தில் 90 சதவீதம் மா மானாவாரியாக அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த நிலையில், மாவைத் தாக்கும் மிக முக்கியமான நோய்கள் குறித்தும், அதைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் கிருஷ்ணகிரி டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சந்தாராஜ் கூறியது:

சாம்பல் நோய், பறவைக் கண் நோய், கருமை நோய், இளஞ்சிவப்பு நோய், பாக்டீரியல் கேன்கர் நோய் போன்றவை மாவைத் தாக்கும் முக்கிய நோய்களாகும். தற்போது நிலவும் தட்ப வெப்ப நிலை காரணமாக மாவில் சாம்பல் நோயின் பாதிப்பு அதிக அளவு ஏற்பட வாய்ப்புள்ளது.

சாம்பல் நோய் காரணி மற்றும் பரவுவதற்கு ஏற்ற காலநிலை: இது ஒரு வகையான பூஞ்சண நோய் ஆகும். பெரும்பாலும் இந்த நோயின் தாக்குதல் டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை காணப்படும்.

இந்த நோய் காற்றின் மூலமும், நல்ல ஈரப்பதம், மிதமான பகல் நேர வெப்ப நிலை, குளிர்ந்த இரவுப் பொழுது ஆகிய நேரங்களில் நோய் வேகமாகப் பரவும்.

நோயின் அறிகுறிகள்: நோய் தாக்கிய பாகங்களின் மேல் வெண்மை அல்லது சாம்பல் பொடி தூவியதைப் போன்ற தோற்றத்தில் பூஞ்சண வளர்ச்சி தென்படும்.

இந்த நோய் பூங்கொத்துகள், தளிர் இலைகளை அதிகம் பாதிப்படையச் செய்கிறது. பூங்கொத்தின் நுனிப் பகுதியை பூஞ்சணம் முதலில் தாக்கி பின்னர் நோய் கீழ் நோக்கிப் பரவி, பூங்கொத்து முழுவதையும் தாக்கும். பின்னர் பூங்கொத்தின் தண்டு, தளிர் இலைகள், கிளைகள் ஆகிய பாகங்களையும் தாக்குகிறது.

தாக்கப்பட்ட பூவின் பாகங்கள், தளிர் இலைகள் கரிந்து, காய்ந்து உதிர்ந்துவிடும். பிஞ்சுக் காய்கள் தோன்றினாலும், அவை விரைவில் உதிர்ந்துவிடும் அல்லது உருவம், நிறம் மாறி காணப்படும்.

கிளைகள் நுனியிலிருந்து, கீழ் நோக்கிக் காய்ந்து, பின்னோக்கிக் கரிதல் அறிகுறியை தோற்றுவிக்கும். காய்ப் பிடிப்பு குறைவதாலும், அதிக அளவில் பூக்களும், காய்களும் உதிர்ந்துவிடுவதாலும், நோய் தாக்கப்பட்ட மரங்களில் மகசூல் இழப்பு 70 முதல் 80 சதவீதம் வரை இருக்கக் கூடும்.

நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: பின்னோக்கிக் கருகல் அறிகுறிகள் தென்படும் கிளைகளை வெட்டி அப்புறப்படுத்தி எரித்து விட வேண்டும்.

நிலத்தில் கிடக்கும் நோய் தாக்கிய இலைகள், பூங்கொத்துகள், கிளைகள் போன்றவற்றை சேகரித்து எரித்து விட வேண்டும்.

பூக்கள் விரிவதற்கு முன்னர் ஒரு முறையும், பிஞ்சுக் காய்கள் தோன்றிய பின்னர் ஒரு முறையும் நனையும் கந்தகத்தை 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மருந்து என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

இந்த வழிமுறைகளைக் கடைபிடித்து சாம்பல் நோயிலிருந்து மா மரத்தைப் பாதுகாத்து அதிக மகசூல் பெறலாம்.

தொடர்புக்கு: டாக்டர் பெருமாள், வேளாண்மை அறிவியல் மையம், எலுமிச்சங்கிரி, கிருஷ்ணகிரி மாவட்டம். தொலைபேசி 04343-296039, 94438 88644.

## ராகி சாகுபடியில் புதிய நுட்பம்



மார்கழி பட்ட ராகியில் புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் குறைந்த தண்ணீரைப் பயன்படுத்தி குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம் என்று தருமபுரி உழவர் பயிற்சி நிலையம் தெரிவித்தது.

தருமபுரி மாவட்டத்தில் சராசரி மழையளவான 853.1 மி.மீ. மழைக்குப் பதிலாக நிகழாண்டு 732.4 மி.மீ. மழை மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது. இது சராசரி மழையைவிட 14 சதவீதம் குறைவாக உள்ளது.

இதனால், மாவட்டத்தில் உள்ள வாணியாறு, வரட்டாறு ஆகிய நீர்த்தேக்கங்கள் தவிர இதர நீர்த்தேக்கங்களான சின்னாறு, தும்பலஹள்ளி, நாகாவதி, தொப்பையாறு ஆகியவற்றில் பாசனத்துக்கான தண்ணீர் இல்லை. வாணியாறு, வரட்டாறு அணைகளிலும் அதன் முழுப் பாசனப் பரப்புக்கு போதுமான தண்ணீர் இல்லை. பாசன ஏரிகளில் ஒரு சில ஏரிகள் தவிர மற்ற ஏரிகளில் தண்ணீர் இல்லை. கிணறுகளிலும் நீர்மட்டம் உயரவில்லை.

இந்த நிலையில், இருக்கும் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்தியே வேளாண் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமெனில் புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது.

ராகி சாகுபடியில் புதிய தொழில்நுட்பம்: கார்த்திகை, மார்கழிப் பட்டங்களில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் ராகி சாகுபடி செய்யப்படுகிறது. ராகி சாகுபடியில் அதிக மகசூல் பெற வேண்டுமெனில் புதிய தொழில்நுட்பங்களுக்கு விவசாயிகள் மாற வேண்டும்.

ரகங்கள் தேர்வு: முதல் கட்டமாக அதிக விளைச்சல் தரக் கூடிய ரகங்கள் எவை என்பதைத் ஆராய்ந்து தேர்வு செய்ய வேண்டும். ஜிபியு 26, ஜிபியு 64, கோ 14 ஆகிய ரகங்கள் அதிக விளைச்சலைத் தரும். எனவே, இத்தகைய ரகங்களை நாற்றுவிட்டு நடவு செய்யலாம்.

ஓர் ஏக்கருக்குத் தேவையான 2 கிலோ விதையை, விதை நேர்த்தி செய்து 30 நிமிஷம் நிழலில் உலர்த்தி பின்னர் நாற்றுவிட வேண்டும்.

ஓர் ஏக்கருக்கு 5 சென்ட் நாற்றாங்கால் தேவை. நன்கு உழுது பயன்படுத்தி ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு 3 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை அடியுரமாக இட வேண்டும். இந்த தொழில்நுட்ப முறையைப் பின்பற்றுவதன் மூலம் வேர் வளர்ச்சியை ஊக்குவிக்கலாம்.

15 முதல் 17 நாள் வயதுடைய நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். 17 நாள்களுக்கு மேல் வயது முதிர்ந்த நாற்றுகளை நடவு செய்தால் நாளொன்றுக்கு ஓர் ஏக்கருக்கு ஒரு மூட்டை மகசூல் குறையும். எனவே, இளம் நாற்றுகளையே தேர்வு செய்ய வேண்டும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் குறிப்பிட்ட வயதுக்குள் நடவு செய்ய இயலாது என்பதால் விதைகளைப் பிரித்து இரண்டு அல்லது மூன்று தவணைகளில் நாற்றுவிடுவது சிறந்ததாகும்.

நடவு முறை: நடவுக்கு முன் அடியுரமாக ஏக்கருக்கு 12 கிலோ தழைச் சத்து தரவல்ல 26 கிலோ யூரியா, 12 கிலோ மணிச்சத்து தரவல்ல 75 கிலோ சூப்பர் பாஸ்பேட், 12 கிலோ சாம்பல் சத்து தரவல்ல 20 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் இட்டு நடவு செய்ய வேண்டும்.

15 செ.மீ.க்கு 15 செ.மீ. இடைவெளியில் குத்துக்கு 2 நாற்றுகள் வீதம் ஒரு சதுர மீட்டருக்கு 45 குத்துகள் இருக்குமாறு நடவு செய்ய வேண்டும்.

மேலுரமாக நடவு செய்த 20ஆம் நாள் களையெடுத்து பயிர் நன்கு வாடும் நிலையில் 12 கிலோ தழைச்சத்து தரவல்ல 26 கிலோ யூரியா இட்டு நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். குலைநோய் தென்பட்டால் உடனடியாகப் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகள் தவறாமல் இத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்றி ராகி சாகுபடியில் ஈடுபடுமாறு வேளாண் இணை இயக்குநர் பொ. மனோகரன், துணை இயக்குநர் ந.மேகநாதன் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### தென்னேரியில் அதி நவீன கால்நடை மருந்தகம் திறப்பு

வாலாஜாபாத்தை அடுத்த தென்னேரியில் ரூ. 26.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட அதிநவீன கால்நடை மருந்தகம் புதன்கிழமை பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.

வாலாஜாபாத் ஒன்றியம் தென்னேரியில் சிறிய அளவிலான கால்நடை மருத்துவமனை செயல்பட்டு வந்தது. இதனால் தென்னேரி மற்றும் அகரம், கட்டவாக்கம், அயிமிச்சேரி,

கோவளவேடு, திருவங்கரணை, மஞ்சமேடு, விளாகம் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போருக்கு பயனளிப்பதாய் இருந்தது.

இருப்பினும் போதிய மருத்துவ வசதியில்லாததால், அக்கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் கால்நடைகளை சிகிச்சைக்காக வாலாஜாபாத், காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டி இருந்தது.

இதைத் தொடர்ந்து அதிநவீன வசதிகளுடன் கூடிய கால்நடை மருத்துவமனை தென்னேரியில் அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் நீண்டநாள்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில் தமிழக அரசு நபார்டு வங்கி உதவியுடன் தென்னேரியில் அதிநவீன வசதிகளுடன் கூடிய கால்நடை மருத்துவமனை அமைக்க உத்தரவிட்டது.

அதன்படி தென்னேரியில் ரூ.26.5 லட்சம் செலவில் அதிநவீன வசதிகளுடன் கூடிய கால்நடை மருத்துவமனை கட்டிமுடிக்கப்பட்டது. இங்கு கால்நடைகளுக்குத் தேவையான அனைத்து மருந்து, மாத்திரைகள், சோதனைக்கூடங்கள், எக்ஸ்ரே மையம், அறுவை சிகிச்சைக் கூடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மருந்தகத்தை புதன்கிழமை கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா திறந்து வைத்து கால்நடைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டார்.

மேலும் தென்னேரியில் உத்தரமேரூர் சட்டப்பேரவை தொகுதி உறுப்பினர் நிதியில் ரூ. 4.5 லட்சம் செலவில் கட்டப்பட்ட ரேஷன்கடை, ரூ. 3 லட்சம் செலவில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடை ஆகியவற்றை அமைச்சர் சின்னையா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் வி. சோமசுந்தரம், வாலாஜாபாத் பா. கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கொடைக்கானல் விவசாயிகளுக்கு தேனீ பெட்டிகள் வழங்கல்

கொடைக்கானல் கீழ்மலைப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை மூலம் தேனீ பெட்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கொடைக்கானலிலுள்ள தேசிய தோட்டக்கலைத் துறை இயக்கத் திட்டத்தின் மூலம், மகரந்த சேர்க்கைக்கு உதவும் தேனீ பெட்டிகளும், தேனீ சுத்திகரிக்க உதவும் உபகரணங்களும் வழங்கும் நிகழ்ச்சி, கீழ்மலைப் பகுதியான தடியன்குடிசையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ராஜாமுகமது தலைமை வகித்தார். இதில், 20 விவசாயிகளுக்கு தேனீ பெட்டிகளை, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ராதாகிருஷ்ணன் வழங்கினார். உதவி இயக்குநர் சின்ராஜ் வரவேற்றார்.

மேலும், தேனீக்களை வளர்க்கும் முறை, அவை விவசாயப் பகுதிகளில் தொந்தரவு இல்லாத இடங்களில் அமைப்பது, மகசூல் பெறுவது, விவசாயிகளுக்கு மண்புழு உரக்கூடம் அமைத்தல், மண்புழு உரப்படுக்கைகள் அமைத்தல் மற்றும் தேனீ வளர்ப்பது ஒரு குடிசைத் தொழிலாகவும், இதன்மூலம் வருமானத்தை பெருக்குவதன் நுட்பத்தையும் தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் விளக்கினர்.

நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் துறை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஆனந்தன், காமனூர் ஊராட்சி மன்றத் தலைவர் முருகன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் தவசி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தோட்டக்கலைத் துறை மூலம், கொடைக்கானல் மேல்மலை, கீழ்மலைப் பகுதிகளில் ரூ. 2.45 லட்சம் செலவில் மொத்தம் 35 விவசாயிகளுக்கு, தேனீ பெட்டிகளும், அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

### வரதமா நதி அணைக்கு நீர்வரத்து

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பெய்த மழையால், பழனி அருகேயுள்ள வரதமா நதி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த பல மாதங்களாக தமிழகத்தின் பல பகுதிகளிலும் பருவமழை பெய்யாத நிலையில், பழனி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வந்தது. இந்நிலையில், கடல் பகுதியில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. இதில், கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பெய்த மழையால், வரதமா நதி அணைக்கட்டுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பழனி-கொடைக்கானல் சாலையில் உள்ள வரதமா நதி அணைக்கட்டின் மொத்த உயரம் 67.42 அடியாகும். தற்போது, 50 அடிக்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. அணைக்கு விநாடிக்கு 27 கனஅடி நீர்வரத்து உள்ளது. வெளியேற்றம் 10 கனஅடியாகும்.

அதேபோன்று, பாலாறு-பொருந்தலாறு அணையின் மொத்த உயரம் 65 அடி. தற்போது, 45 அடிக்கு நீர் நிரம்பியுள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 5 கனஅடி. வெளியேற்றம் விநாடிக்கு 106 கனஅடி.

குதிரையாறு அணையின் மொத்த உயரம் 78 அடியாகும். தற்போது, 48.53 அடி உயரத்துக்கு நீர் நிரம்பியுள்ளது. குடகனாறு அணையில் 15.85 அடி உயரத்துக்கும், நங்காஞ்சியாறு அணையில் 26.34 அடி உயரத்துக்கும், பரப்பலாறு அணையில் 58.76 அடி உயரத்துக்கும் நீர் நிரம்பியுள்ளது. பாலாறு-பொருந்தலாறு மற்றும் வரதமா நதி அணையை தவிர, பிற அணைகளில் நீர்வரத்து இல்லை.

## நடவுமுறை துவரை சாகுபடி அறுவடைத் திருவிழா

சிவகங்கை தாலுகா இலுப்பக்குடி கிராமத்தில் சிவகங்கை வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை உதவியுடன் நாற்று நடவு முறையில் சாகுபடி செய்திருந்த துவரை அறுவடைத் திருவிழா நடைபெற்றது.

இலுப்பக்குடி கிராமத்தில் ரா.சந்திரசேகரன் என்பவரது வயலில் துவரை சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதன் செயல்விளக்கமும் அறுவடைத் திருவிழாவும் நடைபெற்றது. விழாவில், சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சு. செல்லத்துரை தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் 10 சதுர அடியில் அறுவடை மேற்கொண்டு அதில் கிடைத்த மகசூல் அளவிடப்பட்டது. அதில் சாதாரண முறை மகசூலைவிட 60 சதவீதம் அதிகமாக உள்ளது கண்டறியப்பட்டது. ஒரு ஏக்கருக்கு நடவுமுறை சாகுபடியில் 1,150 கிலோ துவரை கிடைத்துள்ளது. இதற்கு ரூ. 28 ஆயிரம் நிகர லாபமாக பெற வாய்ப்புகள் உள்ளதாகவும் கணக்கிட்டனர்.

இதைத்தொடர்ந்து வேளாண்மை துணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, சிவகங்கை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா. தனபாலன் ஆகியோர் தொழில்நுட்பம் குறித்து விளக்கினர். இலுப்பக்குடி ஒன்றிய கவுன்சிலர் பாலச்சந்தர், வட்டார விவசாயி ஆலோசனைக்குழுத் தலைவர் மாரி ஆகியோர் பேசினர்.

விழாவில் இலுப்பக்குடி, படமாத்தூர், அரசனூர், நாலுகோட்டை உள்ளிட்ட

கிராமங்களிலிருந்து 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 42.94 அடியாக இருந்தது. ÷அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 436 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.96 டி.எம்.சி.

## சொட்டுநீர்ப் பாசன பயன்பாடு: ஆட்சியர் ஆய்வு

சொட்டுநீர்ப் பாசன பயன்பாடு குறித்து புதுச்சத்திரம் ஒன்றியத்திலுள்ள விவசாய நிலங்களில் ஆட்சியர் டி.ஜகந்நாதன் புதன்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தோட்டக்கலைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தின் மூலம் நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம் பெரியகவுண்டம்பட்டியில் 3 ஏக்கர் பரப்பில் மரவள்ளி சாகுபடி, நவணி கிராமத்தில் 4 ஏக்கர் பரப்பில் மக்காச்சோளம் சாகுபடி, கடத்தாம் பட்டியில் 5 ஏக்கர் பரப்பில் வெங்காய சாகுபடி, கதிராநல்லூரில் 5 ஏக்கர் பரப்பில் நிலக் கடலை, வெங்காய சாகுபடி, நாட்டாமங்கலத்தில் 5 ஏக்கர் பரப்பில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்ய அரசு மானியத்துடன் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் புதன்கிழமை ஆய்வு செய்தார். அப்போது, சம்மந்தப்பட்ட விவசாயிகளிடம் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க வழங்கப்பட்ட மானியத் தொகை, விவசாயிகளின் பங்காக செலுத்திய தொகை, பணம் செலுத்தியதற்கான ரசீது வழங்கப்பட்டதா என்பது குறித்து கேட்டறிந்தார். மேலும், சொட்டுநீர்ப் பாசனத்துக்கான குழாய் அமைத்துள்ள நிறுவனம் குறித்தும், குழாய்களின் தரம், அவற்றுக்கான உத்தரவாத காலம் குறித்தும் ஆய்வு செய்தார். மேலும், சொட்டுநீர் பாசனம் அமைத்ததன் மூலம் தண்ணீர் செலவும், சாகுபடி செலவும் குறைந்தது குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் கூறியது:

2012-ஆம் ஆண்டுக்கு நாமக்கல் மாவட்டத்தில் 900 ஹெக்டேரில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் 1980 விவசாயிகள் பயன்பெறுகின்றனர். நிகழாண்டில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு, வரிசைப்படி மானிய ஒதுக்கீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் என்றார் அவர்.

சார் ஆட்சியர் அஜய்யாதவ், வேளாண்மை துணை இயக்குநர் கதிரவன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

## வறண்ட மேட்டூர் அணைக்குள் பயிர் சாகுபடி

வறண்ட மேட்டூர் அணைக்குள் பயிரிடப்பட்ட ராகி பயிர்கள் தற்போது முளைவிட்டுள்ளன.

பருவ மழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்ததாலும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால், அணைக்குள் தண்ணீர் குளம்போலத் தேங்கியுள்ளது. இதையடுத்து, அணையோரத்தில் வசிக்கும் விவசாயிகள் வறண்ட அணைப் பகுதிக்குள் உழவுப் பணிகளை மேற்கொண்டனர்.

பண்ணவாடி, கோட்டையூர், நாகமரை, ஒட்டனூர் பகுதிகளில் உள்ள அணையின் வறண்ட நிலத்தில் ராகி, எள், கம்பு, நிலக்கடலை ஆகிய வித்துகளை விதைத்தனர். தற்போது, ராகி பயிர் முளைவிட்டு அணையில் பசுமையாகக் காட்சியளிக்கிறது.

## வேளாண் இயந்திரங்கள் வழங்க ரூ. 55.50 லட்சம் மானியம்

அரியலூர் மாவட்டத்தில் 2012- 13-ம் ஆண்டுக்கு விவசாயிகளுக்கு 222 இயந்திரங்கள், கருவிகளை வழங்க தமிழக அரசு ரூ. 55.50 லட்சம் மானியத்தை ஒதுக்கியுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ப. செந்தில்குமார்.

அரியலூரில் வேளாண் பொறியியல் துறை சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 19 பேருக்கு ரூ. 24,86,950 மதிப்பில் 20 வேளாண் இயந்திரங்கள், கருவிகளை திங்கள்கிழமை வழங்கிய அவர் மேலும் பேசியது:

வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உழவுக் கருவிகள், கதிரடிக்கும் இயந்திரங்கள், களையெடுக்கும் கருவிகள், நாற்று நடும் இயந்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு கருவிகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 60 சத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 50 சத மானியத்திலும் இந்தக் கருவிகள் வழங்கப்பட உள்ளன.

இதற்காக தமிழக அரசு, 2012-13-ம் ஆண்டிற்கு அரியலூர் மாவட்டத்திற்கு 222 இயந்திரங்கள், கருவிகள் வழங்க ரூ. 55.50 லட்சம் மானியத்தை ஒதுக்கியுள்ளது.

முதல் கட்டமாக 12 பேருக்கு பவர் டில்லர் இயந்திரங்கள், ஒருவருக்கு நாற்றுநடும் இயந்திரம், 3 பேருக்கு சுழற் கலப்பைகள், ஒருவருக்கு களையெடுக்கும் கருவி, 2 பேருக்கு மரம் அறுக்கும் கருவி என 19 பேருக்கு 20 கருவிகள் ரூ. 8,66,010 மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மானியம் தவிர மீதித் தொகையை விவசாயிகள் சம்பந்தப்பட்ட உற்பத்தி நிறுவனங்களுக்கு வங்கி

வரைவோலையாகச் செலுத்த வேண்டும்.

மேலும், இத்திட்டத்தின் மூலம் வேளாண் இயந்திரங்கள், கருவிகளை மானியத்தில் பெற விருப்பமுள்ள உடையார்பாளையம் கோட்ட விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்), ஜோதிபுரம், சிதம்பரம் சாலை, ஜயங்கொண்டம் அலுவலகத்தையும், அரியலூர் வருவாய்க் கோட்ட விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், பண்டகச்சாலை வளாகம், ஜயங்கொண்டம் சாலை, அரியலூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் மணி, உதவி செயற்பொறியாளர்கள் அண்ணாதுரை, மோகனகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பச்சைத் தேயிலைக்கு கூடுதல் விலை: விவசாயிகள் மகிழ்ச்சி

நீலகிரி மாவட்டத்தில் விளையும் பச்சைத் தேயிலைக்கு கூடுதல் விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

÷நீலகிரி மாவட்டத்தின் பணப்பயிரான தேயிலை கடந்த சில மாதங்களாக விலை உயர்ந்து வருகிறது. குறிப்பாக நல்ல மற்றும் நடுத்தர ரகத்திற்கு கூடுதல் விலை கிடைத்து வருகிறது. சாதாரணமாக ஒரு கிலோ ரூ. 90 முதல் ரூ. 180 வரை விற்கப்பட்டு வரும் இந்தத் தேயிலையால், தற்போது பச்சைத் தேயிலையின் விலையும் கணிசமாக உயர்ந்து காணப்படுகிறது.

÷முன்பு ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ. 10 முதல் ரூ. 14 வரை விலை கிடைத்து வந்தது. தற்போது ஒரு கிலோவுக்கு ரூ. 17 வரை விலை கிடைத்து வருவதால், இதை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

÷தற்போது பச்சைத் தேயிலை வரத்து குறைந்து காணப்படுகிறது. வரும் மழைக் காலத்திலும் இதே விலை கிடைத்தால் முந்தைய இழப்புகளை சீர்செய்ய முடியும் என்று தேயிலை விவசாயிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## அதலபாதாளத்தில் நிலத்தடி நீர்மட்டம் மழைநீர் சேகரிப்புத் திட்டம் தீவிரப்படுத்தப்படுமா?



கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் முழு வீச்சில் செயல்படுத்தப்பட்ட மழைநீர் சேமிக்கும் திட்டம், தற்போது கண்டுகொள்ளாமல் விடப்பட்டுள்ளதால், தமிழகம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் அதலபாதாளத்திற்கு சென்று விட்டது. இச்சூழலில், முன்மாதிரியான இத்திட்டத்தை தமிழக அரசு மீண்டும் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

தமிழகம் முழுவதும் கடந்த 2006ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் மழைநீர் சேகரிப்பு திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அப்போது, மழைநீர் சேமிப்பு திட்டத்தை கட்டிடத்தின் வரைபடத்தில் குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அரசு தனியார் மற்றும் அரசு கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்படும் என அரசு அறிவித்தது.

மேலும் மழைநீர் சேகரிப்பு திட்டம் அமைக்காவிட்டால், குடிநீர், மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்றும் அரசு எச்சரித்தது. இதனால், தமிழகம் முழுவதும் குடியிருப்புகள், அரசு கட்டிடங்களில் மழைநீர் சேமிப்புத் திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டது.

இதனால், பெரும்பாலான மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது. கோடையிலும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர்மட்டம் குறையாமல் இருந்தது.

ஆனால் அடுத்து வந்த தி.மு.க. ஆட்சியில் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. இதனால், நிலத்தடி நீர்மட்டம் வேகமாக சரிந்தது. மேலும் அனைத்து ஆறுகளிலும் மணல் அதிகளவில் அள்ளப்படுவதால் ஆற்றுப்படுகையிலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது.

மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள நிலையில், மழைநீர் சேகரிப்புத் திட்டம் தீவிரப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அரசு பொறுப்பேற்று 18 மாதங்களுக்கு மேலான போதும், மீண்டும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை முழு வீச்சில் செயல்படுத்துவது குறித்து கண்டுகொள்ளாத நிலையே உள்ளது.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இத்திட்டம் முன்மாதிரி திட்டமாகும். அதனாலேயே இத்திட்டத்தை குஜராத் முதல்வர் நரேந்திரமோடி, தமது மாநிலத்தில் உடனடியாக அமுல்படுத்தினார். தற்போது தமிழகம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் சரிந்து வரும் நிலையில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை தமிழக அரசு மீண்டும் கையிலெடுத்து தீவிரப்படுத்த வேண்டியது அவசர அவசியமாகும் என்றனர்.

பழுதடைந்த மழைநீர் சேகரிப்பு மாதிரிகள்!

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில், மழைநீர் சேகரிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது

மழைநீர் சேகரிக்கும் முறை குறித்த மாதிரிகள் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், நகர்மன்ற அலுவலகங்கள், மாவட்ட ஊராட்சி அலுவலகங்களின் முன்பு வைக்கப்பட்டன.

இது, குடியிருப்புகள், அரசு கட்டடங்களில் மழைநீர் சேமிப்புத் திட்டம் செயல்படுத்த பெரும் உதவியாக இருந்தது.

தற்போது இத்திட்டம் கண்டுகொள்ளப்படாததால் மழைநீர் சேகரிப்பு முறை குறித்த மாதிரிகள் பழைய பொருட்கள் வைக்கப்படும் அறைகளில் போட்டு வைக்கப்பட்டுள்ளன.

## வறண்ட மேட்டூர் அணைக்குள் பயிர் சாகுபடி

வறண்ட மேட்டூர் அணைக்குள் பயிரிடப்பட்ட ராகி பயிர்கள் தற்போது முளைவிட்டுள்ளன.

பருவ மழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்ததாலும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால், அணைக்குள் தண்ணீர் குளம்போலத் தேங்கியுள்ளது. இதையடுத்து, அணையோரத்தில் வசிக்கும் விவசாயிகள் வறண்ட அணைப் பகுதிக்குள் உழவுப் பணிகளை மேற்கொண்டனர்.

பண்ணவாடி, கோட்டையூர், நாகமரை, ஒட்டனூர் பகுதிகளில் உள்ள அணையின் வறண்ட நிலத்தில் ராகி, எள், கம்பு, நிலக்கடலை ஆகிய வித்துகளை விதைத்தனர். தற்போது, ராகி பயிர் முளைவிட்டு அணை பசுமையாகக் காட்சியளிக்கிறது.

## தென் கடலோர தமிழகத்தில் மழை வாய்ப்பு

வங்கக் கடலில் நிலை கொண்டிருக்கும் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக தென் கடலோர தமிழகத்தில் வியாழக்கிழமைமுதல் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென்கிழக்கு வங்கக் கடலை ஒட்டியுள்ள பகுதியில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தென் தமிழகத்தில் வியாழக்கிழமை லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தென் கடலோர தமிழகத்தில் வெள்ளிக்கிழமைமுதல் கன மழை பெய்வதற்கான வாய்ப்பும் உள்ளது. இந்த தாழ்வு நிலையின் நகரும் திசை மற்றும் வலுவடையும் தன்மையைப் பொருத்து தமிழகத்தில் மழை தொடரலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: தென் தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் புதுவையில் ஆங்காங்கே வியாழக்கிழமை லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸô்க இருக்கும். தமிழகத்தில் புதன்கிழமை வறண்ட வானிலையே நிலவியது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

03.01.2013 A.M

## தண்ணீருக்காக தவம் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் அபாயம்

கோவையில் அனைத்து குளங்களும் வறண்டு விட்ட நிலையில், நிலத்தடி நீர் மட்டமும் அதல பாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கிறது. குளிர்காலத்திலேயே குடிநீர் தட்டுப்பாடு என்ற நிலை அனைத்துப்பகுதிகளிலும் அதிகரித்து விட்டது.

இப்பவே, இப்படி என்றால்...இனி, கோடையில் குடிநீர் பிரச்னையை கோவை மக்கள் எவ்வாறு? சமாளிப்பார்கள் என்பது தான் அனைவரின் அச்சமும் கூட

இதோ, மக்களின் மனநிலைகளை கேட்போம்

பிரியா ( குடும்பத் தலைவி, அன்னூர்) :

மத்திய, மாநில அரசுகள் தண்ணீர் மேலாண்மையை சரியாக செய்யாததால், கோடையில் வர வேண்டிய குடிநீர் பற்றாக்குறை குளிர்காலத்திலும் வந்து விட்டது. மழை குறைவுக்கு புவி வெப்பமயமாதல் அதிகரிப்பு, வனப்பகுதி குறைந்து வருவது, மரங்கள் வெட்டப்படுவது ஆகியவை முக்கிய காரணமாகும்.

குமார் ( அன்னூர்) :

அதிகரிக்கும் மக்கள்

தொகைக்கு ஏற்ப தேவைப்படும் குடிநீர் குறித்து அரசுகள் திட்டமிட்டு, செயல்படாததன் விளைவு. இப்போது குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வரும் கோடையில் இந்த தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. குடிநீர் நீரேற்று நிலையத்தில் துவங்கி, பொதுக்குழாய் மற்றும் வீட்டு குழாய் வரை செல்லும் மெயின் குழாய்களில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு, தினமும் பல லட்சம் லிட்டர் தண்ணீர் வீணாகிறது. இதை சரி செய்ய வேண்டும்.

பழனிசாமி

(காங்கயம் பாளையம்) :

தற்போது உள்ள மின் பற்றாக்குறை போல், எதிர்காலத்தில் குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது. கடந்தாண்டு போலவே இந்தாண்டும் மழை இருக்காது என முடிவு

செய்யாமல், கிராமங்களில் மழை நீர் சேகரிப்பு திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

குளிக்கும் நீர், பாத்திரம் கழுவுதல் மற்றும் துணி துவைக்கும் நீரை வீடுகளில் மறு சுழற்சி செய்து, நிலத்தடி நீர் மட்டம் உயரும் வகையில் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

ஜனார்த்தனன் ( சூலூர்):

கிராமங்களில் உள்ள குளம் குட்டைகள் முறையாக பராமரிக் கப்படுவதில்லை. நீர் நிலைகளின் வழித்தடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும்.

குளம், குட்டைகளை பராமரிப்பதில் உள்ளாட்சி நிர்வாகங்கள் முழுமையாக ஈடுபடவேண்டும்.

வீடுகள், அரசு அலுவலகங்களில் மரங்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பற்றாக்குறையாக உள்ள மின்சாரம் உள்ளிட்ட அனைத்தையும் மாற்று வழியில் உருவாக்கமுடியும். ஆனால் தண்ணீரை மாற்று வழியில் உருவாக்க முடியாது.

ஜெயலட்சுமி (கோவை ):

எங்கள் குடியிருப்பு பகுதிகளில் 15 நாட்களுக்கு ஒரு முறை தான் குடிநீர் விடுகின்றனர். உப்பு தண்ணீரும் குழாய் உடைந்துள்ளது என பல காரணங்கள் சொல்லி சரியாக விடுவதில்லை. குழந்தைகளை வைத்து இருக்கின்றோம். தண்ணீரில்லாமல் சமாளிக்க முடியவில்லை. இப்போதே இப்படி இருந்தால் வெயில் காலங்களில் என்ன செய்யப்போகின்றோம் என தெரியவில்லை.

சரவணக்குமார்

(தீத்திப்பாளை யம்):

குடிநீர் காசு கொடுத்துதான் வாங்குகின்றோம். வாங்கும் சம்பளத்தில் எதுக்கெல்லாம் செலவு செய்வது என்றே புரியவில்லை.

இனி வெயில் காலத்தில் தண்ணீர் குடங்களுடன் தெருத்தெருவாக சுத்த வேண்டியது தான்.

பாலமூர்த்தி (பெ.நா.பாளையம்):

சிறுவாணி, பில்லூர் குடிநீரை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். குடிநீர் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உள்ளாட்சி நிர்வாகங்கள் குடிநீர் பயன்பாட்டை முறைப்படுத்த கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மழைக்காலத்தில் நீரை பாதுகாப்பாக சேகரித்து, அதை நீண்ட நாள் பாதுகாப்பாக பயன்படுத்தும் யுக்திகளை மக்களுக்கு கற்றுத் தர வேண்டும்.

சிங்காரம் ( துடியலூர்):

குளம், குட்டை, ஆறு உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. நீர்

வழிப்பாதைகளும் ஆக்கிரமிப்பில் உள்ளன. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றினாலே போதும், குடிநீர் பிரச்னைக்கு ஓரளவு தீர்வு காண முடியும்.

புதிய நீர் ஆதாரங்களை உருவாக்க வேண்டும். கோவையை சுற்றிலும் உள்ள குளங்களில் தூய்மையான நீரை தேக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராதாகிருஷ்ணன் (ராமநாதபுரம்):

இந்தாண்டு மழை குறைந்துள்ளதால், அனைத்து இடங்களிலும் குடிநீர் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. குளிர்காலமான மார்கழி மாதத்திலேயே இந்த நிலை என்றால், கோடை காலத்தில் மிகவும் மோசமான சூழல் உருவாகும்.

வீடுகளிலும், பொது இடங்களிலும் தண்ணீர் விரயம் செய்வதை தடுக்க வேண்டும்.

தண்ணீர் சேமிப்பு என்பது நமது வாழ்வாதாரம். பணம், நகைகளை சேமிப்பதற்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் தருகின்றோமோ, அதே போல் தண்ணீர் சேமிப்புக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

திலகவதி( கோவை ):

இந்த பூமியில் மூன்றாம் உலகப் போர் ஒன்று வந்தால் அது தண்ணீருக்காக தான் வரும் என, பல நாடுகள் எச்சரித்து வருகின்றன. நம் நாட்டில் தண்ணீர் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் போதுமான விழிப்புணர்வு இல்லை.

மாநகராட்சி பைப்களில் பலவற்றிலும் "டேப்' சரியாக இல்லாததால், தண்ணீர் அதிகம் வீணாகிறது.

குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் வீணாவதை தடுக்க அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுப்பதில்லை.

வீடுகளில் உள்ள பெண்களிடம் தண்ணீர் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு கட்டாயம் வேண்டும். தேவையான அளவு மட்டுமே தண்ணீர் பயன்படுத்த வேண்டும். தேவையில்லாமல் தண்ணீர் செலவு செய்வதை தவிர்க்க வேண்டும்.

தற்போது இருந்தே குடிநீர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தினால் மட்டுமே, கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை ஓரளவு சமாளிக்க முடியும்.

## எட்டாத உயரத்திற்கு பறக்கும் அரிசிவிலை...சாமானியர்கள் அதிர்ச்சி.

தூத்துக்குடி: தமிழ்நாட்டில் கடந்த இரண்டு மாதங்களாக அரிசிவிலை கிடுகிடுவெனஉயர்ந்து வருகிறது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கிலோ.35 ரூபாய்க்கு விற்ற கர்நாடக பொன்னி

அரிசி தற்போது 46 ரூபாய்க்கு விற்று வருகிறது.இதனால் நடுத்தர மக்கள் மற்றும் ஏழை மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். உடனடியாக அரிசிவிலையை குறைக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவில் கோடிக்கணக்கான விவசாய மக்கள் ஒரு காலத்தில் வாழ்ந்த வந்த நிலையில் விவசாயத் தொழில் கொடிகட்டி பறந்து வந்தது. நமது நாட்டிலுள்ள நஞ்சை, புஞ்சை விவசாய நிலங்களில் நெல், வாழை, பருத்தி, காய்கறிகள், பழச்செடிகள், தானிய வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள், பழமரங்கள் போன்றவை பலகோடி ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகின்றன.

அன்றுள்ள காலகட்டத்தில் நமது நாட்டில் விவசாயம் ஓஹோவென்று இருந்தநிலையில் அந்நிய நாடுகள் நம்நாட்டில் இருந்து விவசாயப் பொருட்களை தங்கள் நாடுகளுக்கு விலைகொடுத்து வாங்கிச்சென்றனர். ஆனால் இன்றுநமது நாட்டில் தற்போது விவசாயம் சரிவர இல்லாத நிலையில் விவசாய உற்பத்திப்பொருட்களின் விளைச்சலும் பலகோடி டன் மதிப்பில் இருந்து குறைந்துகொண்டே வருகிறது. இதனால் நாம் விவசாய விளைபொருட்களை வெளிநாடுகளில் இருந்து அதிகவிலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்தும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

உயரும் விலைவாசி உயர்வு : இதுபோன்ற பிரச்னைகளால் இன்று விலைவாசி உயர்வு விண்ணைத்தொடும் வகையில் நாளுக்கு நாள் உயரஉயர பறந்துகொண்டே செல்கிறது. ""நேற்று இருந்த விலை இன்று இல்லை, இன்று இருந்த விலை நாளை இல்லை, நாளை இருக்கும் விலை அதற்கு அடுத்தநாள் இல்லை" என்பதற்கேற்ப உணவுப்பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்து கொண்டே செல்கிறது. அதிரடியாக அதிகரித்து வரும் விலைவாசி உயர்வால் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

கிடைக்கின்ற குறைந்த வருவாயில் குடும்ப வண்டியை ஒரு மாதம் ஓட்டுவதற்குள் குடும்பத்தலைவர்கள் படாதபாடுபட்டு வருகிறார்கள். பண வீக்கம், பொருளாதார சிக்கல்கள், உணவுபொருட்கள் போதிய அளவில் விளைச்சல் இல்லாமை, இயற்கை சீரழிவுகள் போன்ற பல்வேறு காரணங்களால் பொருட்களின் விலையானது விலைவாசி உயர்வு பறந்துகொண்டே வருகிறது.

ஒரு லிட்டர் பால் விற்கும் விலைக்கு, ஒரு லிட்டர் தண்ணீர் விற்கும் நிலை இன்று வந்துவிட்டது. இந்தியாவை பொறுத்தவரை அனைத்து மாநில மக்களும் விலைவாசி உயர்வால் இன்னலுக்கு உள்ளாகிதான் வருகிறார்கள். அதிக அளவில் விவசாய நிலங்கள் இருந்தாலும் விவசாய மானது

சில லட்சம் ஏக்கர் பரப்பளவிலே நடக்கிறது. இதனால் உணவுபொருட்களின் உற்பத்தி குறைந்துகொண்டே வருகிறது.

விவசாய நிலத்தில் முளைக்கும் வீடுகள் : தமிழகத்தில் நடந்துவரும் விவசாயத்தை பொறுத்தவரை நெல், வாழைப் பயிர்களே அதிகஅளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உற்பத்தியாகும் நெல் இந்தியா முழுவதும் மட்டுமின்றி உலக நாடுகளுக்கும் ஏற்றுமதியாகி வருகிறது. இப்படிப்பட்ட சூழலில் தற்போது தமிழகத்திலும் விவசாயம் கேள்விக்குறியாகி வருகிறது. தமிழகத்திலுள்ள விவசாய நிலங்களில், விவசாய உணவுப்பயிர்கள் விளைவதற்கு பதிலாக கான்கிரீட் வீடுகள் தான் முளைத்து வருகின்றன. இதுமட்டுமா இன்னும் இருக்கு என்று சொல்லும் வகையில் வீடுகள் கட்டும் இடங்கள் போக மீதமுள்ள விவசாய நிலங்கள் எல்லாம் "பிளாட்டுகள்' போட்டு விற்பனை செய்யப்பட்டும் வருகிறது. விவசாய நிலங்கள் எல்லாம் பிளாட்டுகளாக மாறிவரும் நிலையில் தமிழகத்தில் நிலம் விலை இதுதான் நிச்சயமான விலை என்று சொல்லமுடியாத அளவிற்கு உயர்ந்து கொண்டே போகிறது. ஒன்றுக்கும் ஆகாத வறண்ட நிலங்கள் கூட இன்று பல லட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது. இப்படி விவசாய நிலங்கள் எல்லாம் பிளாட்டுகளாக மாறிவருவதால், போதிய அளவில் விவசாயம் செய்வதற்கு வசதியில்லாமல் சிரமப்பட்டு வரும் பலவிவசாயிகள் தங்களின் நிலங்களை நிலத்தரகர்கள் கேட்கும் விலைக்கு விற்றுவருகின்றனர். இதனால் விவசாயம் என்பது பல சதவீதம் குறைந்துவிட்டது.

குறைந்துவரும் நெல் உற்பத்தி : தற்போதுள்ள சூழ்நிலைகளில் அண்டை மாநிலங்கள் தமிழகத்திற்கு தண்ணீர் தர மறுப்பது, மாவட்டத்திற்குள்ளே தண்ணீருக்கு தகராறு, விவசாய விளைபொருட்களுக்கு போதிய விலையில்லாதது, விவசாய பொருட்களிகளின் உற்பத்தி செலவு உயர்வு, விவசாய வேலைக்கு போதிய ஆட்கள் இல்லாதது, உரங்கள் தட்டுப்பாடு, விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் விவசாயத் தொழில் வீரியம் இல்லாமலே நடந்து வருகிறது. இவ்வளவு கஷ்டப்பட்டு விவசாயிகள் விளைபொருட்களை உற்பத்தி செய்தாலும் சிலநேரங்களில் சூறாவளிக்காற்று, புயல், மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கையின் சீரழிவுகளிலும் சிக்கி விவசாய விளைபொருட்கள் யாருக்கும் பயன்இல்லாமல் சீரழிந்து போய் விடுகின்றன. இதனால் கஷ்டப்பட்டு கடன் வாங்கிய பணத்தை போட்டு விவசாயம் செய்த விவசாயிகள் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு விடுகின்றனர். இதனால் விவசாயிகளின் கடன் சுமை அதிகமாகி விடுகிறது. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் கடன்சுமை அதிகமாகி தற்கொலை செய்துகொண்டு வரும் விவசாயிகளின் எண்ணிக்கை

தமிழகத்தில் சமீபகாலமாக அதிகரித்து வருகிறது என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

அதிகரித்துவரும் அரிசி விலை : தமிழகம் முழுவதும் விவசாய விளைபொருட்கள் உற்பத்தியில் ஒட்டுமொத்தமாக நெல் விளைச்சல் குறைந்துகொண்டே வருகிறது. குறைந்துவரும் நெல் உற்பத்தியால் தற்போது அரிசிவிலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. மேலும் உரங்கள், விவசாயத்தொழிலாளர்களின் கூலி, இயந்திரங்களின் வாடகை உயர்வு போன்ற பல்வேறு காரணங்களாலும் அரிசியின் விலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. தென்மாநில மக்கள் பெரும்பாலும் மூன்றுநேரமும் அரிசியிலான உணவுப்பொருட்களையே சாப்பிட்டு வருவதால் இம்மக்களுக்கு அரிசி அத்தியாவசிய தேவையாகிறது. இப்படி தேவை அதிகமாக இருக்கும் பட்சத்தில் அரிசி உற்பத்தி குறைவாக இருப்பதால் விலை உயர்வு என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடுகிறது. சமீபகாலமாக அரிசி விலை உயர்வானது கிலோவுக்கு 5 ரூபாய் முதல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஒரு கிலோ அரிசி 46 ரூபாய்க்கு குறையாமல் விற்கப்பட்டுவரும் நிலையில் இப்படி விலை உயர்ந்துகொண்டே வருவது எங்குபோய் நிற்குமோ என்பதும் தெரியவில்லை.

குமரி மாவட்டத்தில் உற்பத்தி குறைந்தது: குமரி மாவட்டத்தில் சம்பா அரிசி விலை அதிக அளவில் உயர்ந்துள்ளதால் அரிசி வியபாரிகள் சம்பா அரிசி கொள்முதல் செய்து விற்பனை செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் வரும் பொங்கலுக்கு சம்பா அரிசி தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு(2012) போதிய மழை பெய்யாததால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வறட்சி ஏற்பட்டுள்ளது.குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்களில் தண்ணிர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர்கள் தண்ணீரின்றி கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.பல்வேறு பகுதிகளில் சம்பா பயிர்கள் கரிந்துள்ளதால் விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. கருகும் பயிர்களை காப்பாற்ற கர்நாடகத்திலிருந்து தண்ணீர் திறந்து விடக்கோரி தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருவதுடன் பல்வேறு அமைப்புகளும் இதற்காக போராடி வருகின்றனர். இந்நிலையில் மாநிலத்தின் பல மாவட்டங்களில் அரிசி விலை பல மடங்கு உயர்ந்துள்ளது.தமிழகத்தின் நெற்களஞ்சியங்களில் ஒன்றான குமரி மாவட்டத்தில் மழை இல்லாத காரணத்தால் பாசன அணைகளில் போதிய தண்ணீர் இல்லததால் கடந்த கன்னிப்பூவில் பெரும்பான்மை பகுதிகளில் பயிர் செய்யப்படவில்லை.இதனால் அறுவடையின் போது நெல் விலை கணிசமான நிலையில் இருந்தது. இதனால் உற்சாகமடைந்த விவசாயிகள் அறுவடையின் போது உடனுக்குடன்

நெல்லை விற்பனை செய்து விட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக இருந்த நெல்லையும் அவ்வப்போது விற்பனை செய்து விட்டதால் தற்பொழுது மாவட்டத்தில் எந்த பகுதியிலும் நெல் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் கோட்டாறு பகுதியிலுள்ள எந்த மில்களுக்கும் நெல்வரத்து இல்லாமல் வெளிமாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலிருந்தும் நெல், அரிசி கொள்முதல் செய்கின்றனர்.

சன்ன ரகங்கள் மற்றும் மோட்டா ரகங்கள் ஆந்திரா,ஓடிசியா,மற்றும் மேற்கு வங்காளம் மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு நமது மாநிலத்தின் பல பகுதிகளிலுமுள்ள மார்டன் ரைஸ் மில்களுக்கு அனுப்பபடு கிறது.கர்நாடக மாநிலம்,மற்றும் தமிழகத்தில் மதுரை, விழுப்புரம் போன்ற மாவட்டங்களிலிருந்து பொன்னி,வெள்ளைப்பொன்னி ரகங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.மேலும் ஒடிசியா மாநிலத்திலிருந்து கிராந்தி என்ற நெல் வகை கொள்முதல் செய்யப்பட்டு பின்னர் அரிசியாக்கப்பட்டு செங்கல்பட்டு ரகங்களாக விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் அரிசி கொள்முதல் செய்து விற்பனை செய்து வருவதால் அரிசி விலை அதிகரித்துள்ளது.தற்பொழுது தூத்துக்குடி மாவட்டத்தில் பொன்னி ரகங்கள் 32 ரூபாய் முதல் 46 ரூபாய் வரையிலும்,டொப்பி 29 ரூபாய் முதல் 32 ரூபாய் வரையிலும், செங்கல்பட்டு 33 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.அம்பை 16 போன்ற சம்பா ரகங்கள் மாநிலத்தின் எந்த பகுதியிலும் கிடைக்காததால் டி.கே.9 போன்ற சம்பா ரகங்களை மக்கள் பயன் படுத்துவது வழக்கம். இந்நிலையில் அம்பை 16 ரகம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் டி.கே.9 விலை அதிகரித்துள்ளது.கடந்த பொங்கலின் போது 26 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட டி.கே.9 தற்பொழுது 36 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பொதுமக்கள் இந்த அரிசியை வாங்க தயங்கி வருகின்றனர். பொங்கலுக்கு சம்பா அரிசி தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது

அவசர நடவடிக்கை அவசியம் : மத்திய, மாநில அரசுகள், பாங்க் நிர்வாகத்தினர், வேளாண்மைத்துறை அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நலிந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் திட்டங்களை வகுத்து முனைப்புடன் செயல்படுத்தவேண்டும். அத்துடன் இயற்கை சீரழிவுகளால் பாதிப்பிற்குள்ளாகும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாக வழங்கிட வேண்டும். மேலும் விவசாயிகளுக்கு தேவையான விதைகள், இடுபொருட்கள், உரம் போன்றவற்றை மானிய விலையில் வழங்கவேண்டும். உற்பத்தியாகும் விவசாய விளைபொருட்களை விவசாயிகளை ஏமாற்றி குறைந்த விலைக்கு வாங்கி கொள்ளை லாபம் பார்க்கும் இடைத்தரகர்களை முற்றிலுமாக

ஒழித்திட விவசாய விளை பொருட்களை அரசே நல்ல விலை நிர்ணயித்து கொள்முதல் செய்யவேண்டும். இதற்கெல்லாம் மேலாக விவசாய நிலங்கள் குடியிருப்புகளாக மாறிவருவதற்கு தடை விதிக்கவேண்டும். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு ஊக்கத்தொகைகள், வயதான காலத்தில் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, அவர்களின் குழந்தைகளுக்கு கல்விபயில கடன், இலவச மருத்துவவசதி போன்ற தேவையான வசதிகளை எல்லாம் முறையாக செய்துகொடுப்பதிலும் அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும். இல்லையென்றால் வருங் காலத்தில் சுகர் பேஷண்ட்டுகள் மட்டுமல்ல யாருமே அரிசி சாதம் சாப்பிட முடியாது என்கிற நிலை உருவானாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை

## மாடுகளுக்கு தீவனமாகும் நிலையில் சம்பா பயிர்கள்

தம்மம்பட்டி: தம்மம்பட்டி பகுதியில், ஆற்று நீர் பாசனத்தை நம்பி நடவுசெய்த சம்பா பயிற்கள், நீரின்றி கருகியதால், மாடுகளுக்கு தீவனமாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

தம்மம்பட்டி அருகே கொல்லிமலை அடிவார கிராமமான சேரடியில், எழுத்துக்கல் பகுதியில் சுவேத நதி உற்பத்தியாகிறது. இது, தம்மம்பட்டி, கெங்கவல்லி, வீரகனூர் வழியாக சென்று வங்கக் கடலில் கலக்கிறது. வழியில், நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய, பெரிய பாசன வாய்க்கால்களுக்கு தண்ணீர் செல்கிறது. இதன் மூலம், ஆயிரம் ஏக்கருக்கும் மேல், விளை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் பெய்யும் பருவமழையினால், சுவேத நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஆறு மாதத்துக்கு தண்ணீர் செல்லும். இதன் மூலம், ஆற்று நீர் பாசன விவசாயிகள், ஒரு போக சம்பா பயிரிடுவர்.

இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், டிசம்பர் மாதமே சுவேத நதி வற்றியது. இதனால், ஆற்று பாசனத்தை நம்பி பயிரிட்ட சம்பா பயிர்கள், நீரின்றி கருகும் நிலை ஏற்பட்டது. கருகிய பயிர்கள், கால்நடைகளுக்கு தீவனமாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மகசூலை நம்பி, பல ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி பயிர் செய்த விவசாயிகள், பெரும் வேதனை அடைந்துள்ளனர்.

## நிலக்கடலை வரத்தில் கடும் சரிவால் கடலை எண்ணெய் விலை கிடு கிடு

சேலம்: தமிழகத்தில், நிலக்கடலை விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், வெளி மாநிலங்களில் இருந்து வந்து கொண்டு இருந்த கடலையின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளதால், மார்க்கெட்டில் தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் காரணமாக கடலை எண்ணெய் விலையில், திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் சேலம், தர்மபுரி, நாமக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, ஈரோடு மாவட்டங்களில் அதிக அளவில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. நடப்பாண்டில், பருவ மழை பாதிப்பு காரணமாக நிலக்கடலையின் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை.

அதே நேரத்தில் ஆந்திரா, கர்நாடகா, மாஹாராஷ்டிரா, மேற்கு வங்களாத்தில் இருந்து தமிழக எண்ணெய் ஆலைகளுக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த நிலக்கடலையின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால், மார்க்கெட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டு, அதன் விலையில், கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை, உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வு அப்படியே எண்ணெய் விலையில் எதிரொலித்துள்ளதால், கடலை எண்ணெய், ரீபைண்ட் கடலை எண்ணெயின் விலையில், லிட்டருக்கு நேற்று ஒரே நாளில், ஐந்து ரூபாய் வரை உயர்ந்தது.

கடந்த வாரம் கடலை எண்ணெய் லிட்டர், 124 ரூபாயில் இருந்து, 129 ரூபாயாக உயர்ந்துள்ளது. கடலை எண்ணெய், 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட டின், 1,860 ரூபாய்க்கு விற்றது, 1,935 ரூபாயாக உயர்ந்துள்ளது.

கடலை ரீபைண்ட் லிட்டர் 140 ரூபாய்க்கு விற்றது, ஐந்து ரூபாய் அதிகரித்து, 145 ரூபாய்க்கு விற்கிறது. இதே போல், 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட டின், 2,100 ரூபாய்க்கு விற்றது, 2,175 ரூபாயாக உயர்ந்துள்ளது.

செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த எண்ணெய் வியாபாரி கதிரேசன் கூறியதாவது:

தமிழகத்தில் நிலவும் கடுமையான மின்வெட்டால் எண்ணெய் ஆலைகள் உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை. இதன் காரணமாக உற்பத்தியில் கடும் பாதிப்பு நிலவுகிறது. இந்நிலையில், நிலக்கடலைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அதன் விலையிலும் உயர்வு ஏற்பட்டுள்ளது.

அதிக விலை கொடுத்து கடலையை வாங்கி அதில் இருந்து எண்ணெய் தயாரித்து விற்பனைக்கு அனுப்பும் நிலையில், கடலையின் விலை சரிந்து விட்டதால், நஷ்டத்தை சந்திக்க நேரிடும் என, கருதி எண்ணெய் ஆலைகள் கடலை எண்ணெய் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தி உள்ளன. இதன் காரணாமாக எண்ணெய் விலையில், லிட்டருக்கு ஐந்து ரூபாய் உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றார்.

## விதை உற்பத்திக்கான பயிற்சி முகாம்

அவலூர்பேட்டை : சங்கிலிகுப்பத்தில் தரமான விதை உற்பத்தி குறித்து பயிற்சி முகாம் நடந்தது. மேல்மலையனூர் ஒன்றியம் சங்கிலிகுப்பம் கிராமத்தில் விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு

விதை உற்பத்தி செய்வது குறித்த தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.

ஊராட்சி தலைவர் தமிழ்ச்செல்வி, ஒன்றிய கவுன்சிலர் அமுதா முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு தலைமை தாங்கினார். நீர் வளம், நில வளம் மற்றும் வேர்க்கடலை, நெல், உளுந்து சாகுபடியில் தரமான விதைகளை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து அவர் விளக்கினார்.

முன்னாள் எம்.எல்.ஏ., தமிழ்மொழி ராஜதத்தன் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேட்டினை வழங்கினார். நாகார்சுனா கெமிக்கல் பெர்டிலைசர்ஸ் பகுதிமேலாளர் செந்தில் குமார், 100 சதவீதம் மானிய விலையில் தெளிப்பு நீர் தூவும் கருவி, மழைத்தூவும் கருவிகளின் பயன் குறித்து பேசினார்.

இதில் உதவி வேளாண் அலுவலர்கள் ரகுபதி, வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி,தமிழ்மணி, இளவரசி,பராசக்தி, அட்மா திட்ட களப்பணியாளர்கள் ஸ்ரீதேவி, அருள்பாபு, மோகன்ராஜ் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். கண்ணப்பன் நன்றி கூறினார்.

## மரவள்ளி விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

சின்னசேலம் : மரவள்ளிக்கிழங்கு விலை உயர்ந்துள்ளதால் சின்னசேலம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.சின்னசேலம் பகுதியில் விவசாயமே முக்கிய தொழிலாக உள்ளது. மணிலா, கரும்பு, நெல், மரவள்ளி மற்றும் தோட்டப்பயிர்கள் செய்யப்படுகிறது. பராமரிப்பு செலவு குறைவு மற்றும் அதிக அளவில் தண்ணீர் தேவையில்லை என்பதால் மரவள்ளி அதிகம் பயிரிடப்படுகிறது.கடந்த ஆண்டு கன மழை மற்றும் அதிக பரப்பளவில் மரவள்ளி பயிர்செய்யப்பட்டதால் விலை வீழ்ச்சியடைந்து, மூட்டை 200 ரூபாய் வரை மட்டுமே விற்றதால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே மரவள்ளி விலை மூட்டை 500 ரூபாய்க்கு விற்கப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.மின் வெட்டு, உரம் விலை உயர்வு, ஆள் பற்றாக்குறை மற்றும் பருவமழை பொய்த்தது போன்ற காரணங்களால் வேதனையில் இருந்த விவசாயிகளுக்கு மரவள்ளி அதிக விலை உயர்வு சின்னசேலம் பகுதி விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## கள்ளக்குறிச்சி கூட்டுறவு வாரச்சந்தையில்ரூ.40 லட்சம் மதிப்பில் பஞ்சு கொள்முதல்

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பருத்தி வாரச்சந்தையில் நேற்று 2,100 பஞ்சு மூட்டைகள் 40 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி வார சந்தை நடந்தது.விழுப்புரம், கடலூர், பெரம்பலூர்

மாவட்டங்களைச் சேர்ந்த பிம்பலூர், அத்திபாக்கம், கைகளத்தூர், பசும்பலூர், எரவார், ஓடியந்தல், எலியத்தூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.மொத்தம் 215 விவசாயிகள் சார்பில் 2,100 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.திருப்பூர், அன்னூர், வாழப்பாடி, திண்டுகல், தேனி, மகுடஞ்சாவடி, கொங்கனாபுரம் மற்றும் விழுப்புரம் பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் ஏலத்தில் பங்கேற்றனர்.நேற்று எல்.ஆர்.ஓ., பஞ்சு ரகம் குவிண்டால் அதிகபட்சமாக 4,212 ரூபாய், குறைந்தபட்சமாக 4,109 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. சுவீன் பஞ்சு ரகம் குவிண்டால் அதிகபட்சமாக 5,001 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 4,959 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.விவசாயிகள் கொண்டு வந்த 2,100 பஞ்சு மூட்டைகள் மொத்தம் 40 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. நான்கு வாரங்கள் நடந்த பருத்தி சந்தைகளில் மொத்தம் 51 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கு பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

## கரும்பு மறுபயிருக்குகளையெடுக்கும் பணிகச்சிராயபாளையம்:

கரும்பு அறுவடை முடிந்து மறுபயிர் துளிர்விட்டுள்ள நிலையில் களை எடுக்கும் பணி நடந்து வருகிறது.கச்சிராயபாளையம் பகுதியை சுற்றிலும் கரும்பு அறுவடை நடந்து வருகிறது. கரும்பு வெட்டப்பட்ட வயல்களில் அடுத்த பருவத்திற்கான கரும்பு பயிர்கள் துளிர்த்து வருகின்றன.இந்நிலையில் பயிர்களின் இடையே உள்ள கடைகளை அகற்றும் பணி நடந்து வருகிறது.

## வாழை விவசாயிகளுக்கு நாளை பயிற்சி முகாம்: வம்பன் அழைப்பு

புதுக்கோட்டை: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில், வாழை சாகுபடியில் பின்பற்ற வேண்டிய நவீன தொழில்நுட்பம், பூச்சி மற்றும் நோய் தடுப்பு நடவடக்கைகள் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நாளை நடக்கிறது.

இதுகுறித்து அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை: புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில், வாழை விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தவரை, புதுக்கோட்டை, ஆலங்குடி, கறம்பக்குடி, அறந்தாங்கி, திருவரங்குளம், கந்தர்வக்கோட்டை தாலுகா பகுதிகளில் வாழை அதிகமாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தண்டு துளைப்பான், கிழங்கு துளைப்பான், அசுவினி பூச்சிகள் மற்றும் நுண்புழுக்கள் தாக்குதலால் தார் பருவத்தில் வாழைகள் சேதமடைகிறது.

இதுபோன்று இலைப்புள்ளி, வாடல் போன்ற நோய்கள் தாக்குவதாலும், வாழைகள் சேதடைகிறது. நோய் மற்றும் பூச்சி தாக்குதல்களிலிருந்து வாழைகளை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் குறித்தும், வாழை சாகுபடியில் துல்லிய பண்ணையம், நவீன தொழில்நுட்பம் ஆகியவற்றை பின்பற்றுவதன் மூலம், மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

வம்பன் வேளாண் அறிவியல் நிலைய கூட்ட அரங்கில், நாளை காலை, 10 மணிக்கு துவங்க உள்ள பயிற்சி முகாமில், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வாழை விவசாயிகள் அனைவரும் பங்கேற்கலாம்.

## விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கல்

உடையார்பாளையம்: தா.பழூர் பகுதியைச் சேர்ந்த, 48 விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அருகே உள்ள தா.பழூர் யூனியன் அலுவலகத்தில், திருந்திய நெல் சாகுபடியில் செயல் விளக்கம் மற்றும் விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கம் விழா நடந்தது.

விழாவுக்கு தா.பழூர் யூனியன் தலைவர் ஜெயசுதா தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் சுகந்தி முன்னிலை வகித்தார்.

தா.பழூர் பகுதியைச் சேர்ந்த, 48 விவசாயிகளுக்கு, 3,000ம் ரூபாய் மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டன. தொழில்நுட்ப வல்லுனர்கள் சகாதேவன், உஷா, குமணன், வேளாண் உதவி அலுவலர்கள் ராஜா, சிவக்குமார், கலையரசன், ஜோதி, செந்தில் மற்றும் விவசாய பிரதிநிதிகள் நாகரத்தினம், திருஞானம், மாரிமுத்து, கதிர்வேல் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

## தென்னை நார்க்கழிவை பயன்படுத்தும் விவசாயிகள்

பெரியகுளம் : தென்னை நார்கழிவை இயற்கை சுழற்சியில், பயனுள்ள உரமாக மாற்றி, நிலங்களுக்கு பயன்படுத்துவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பெரியகுளம் மற்றும் ஒன்றியப் பகுதியில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. தேங்காயிலிருந்து எண்ணெய், மட்டையிலிருந்து கயிறு உள்பட தென்னையில் அனைத்து பகுதிகளும் உபயோகமாகிறது. பெரியகுளம், கள்ளிப்பட்டி, கைலாசபட்டி பகுதியில் மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கப்பட்டு கடைசியாக நார்கழிவுகளை வீணாகின்றன. நார்கழிவுகளை தீயிட்டு எரிப்பதால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுகிறது.பெரியகுளம் பகுதியில்

விவசாயிகள் சிலர், வீணாகும் நார்கழிவுகளை இயற்கை உரமாக பயன்படுத்துகின்றனர். இதனால் மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகரிக்க செய்யலாம். ஒரு எக்டேரில் உள்ள தென்னையிலிருந்து ஆயிரம் முதல் 1500 வரை மட்டைகள் கிடைக்கிறது. இவற்றிலிருந்து ஒரு டன் எடையுள்ள நார்கழிவுகள் கிடைக்கும். இந்த நார்கழிவுகளை சிப்பிக்காளான் பயன்படுத்தி சத்துமிக்க இயற்கை உரம் தயாரிக்கலாம். என விவசாயிகள் தெரிவித்தனர்.

**திராட்சை விவசாயிகள் கவலை மொச்சை விவசாயிகள் மகிழ்ச்**

கூடலூர் : தேனி மாவட்டத்தில், அதிகளவு பனிப்பொழிவால், திராட்சையில் செவட்டை நோய் தாக்கி பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் திராட்சை விவசாயிகள் கவலையடைந்துள்ள நிலையில், இதுவே மொச்சை மகசூலை அதிகரித்துள்ளதால், மொச்சை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் கூடலூர், குள்ளப்பகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் திராட்சை விவசாயம் அதிகம் உள்ளது. கடந்த சில தினங்களாக, கடும் பனிப்பொழிவால், திராட்சையில் செவட்டை நோய் தாக்கியுள்ளது.பலன் தரும் நேரத்தில், பூக்கள் உதிர்ந்து வரத்து குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

செவட்டை நோயில் இருந்து, பயிர்களை காப்பாற்ற,தினசரி மூன்று முறை மருந்து தெளித்து வருகின்றனர். இதனால் திராட்சை விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

மகிழ்ச்சியில் மொச்சை விவசாயிகள்: பனிப்பொழிவால், மொச்சை பயிரில் பூக்கள் கூடுதலாக பூத்து,காய்ப்பு அதிகரித்துள்ளது. கூடலூரில் மொச்சை சீசன் துவங்கும் போது, வரத்து மிகக் குறைவாக இருந்தது.தற்போது வரத்து அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**வாழைத்தோட்டத்திற்குள் புகுந்து யானைகள் அட்டக்காசம் *களக்காடு விவசாயிகள் கவலை**

களக்காடு:களக்காடு மலையடிவாரப்பகுதியில் உள்ள வாழைத் தோட்டத்திற்குள் புகுந்த யானைகள் வாழைகளை முறித்து நாசப்படுத்தியதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். களக்காடு மலை அடிவாரப் பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக விளைநிலங்களுக்கு புகுந்து வாழை, பனை, தென்னை, கடலை, முந்திரி போன்ற பயிர்களை நாசப்படுத்தி வருகிறது. நேற்று முன்தினம் களக்காடு, சிதம்பராபுரத்தை அடுத்த காட்டுப்பத்து பகுதியில் காட்டு யானைகள் புகுந்து முத்துகிருஷ்ணனுக்கு சொந்தமான வாழைகளை நாசம் செய்தது. இதனையறிந்த விவசாயி, திருக்குறுங்குடி வனத்துறையினருக்கு

தகவல் அளித்தார். இதன் பேரில் வனத்துறை அதிகாரிகள் விவசாயிகளுடன் இணைந்து தீப்பந்தம் கொளுத்தியும், பட்டாசு வெடித்தும் காட்டிற்குள் யானைகளை விரட்டியடித்தனர்.
இதனால் மலைஅடிவாரப்பகுதியில் உள்ள விளை நிலங்களில் பயிர் செய்துள்ள விவசாயிகள் பீதி அடைந்துள்ளனர்.

மின் வேலி அமைக்கப்படுமா?
களக்காடு மலையடிவாரப்பகுதியில் புகுந்து அட்டகாசம் செய்து வரும் யானைகளை, மீண்டும் காட்டிற்குள் விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு உடனடியாக வழங்க வேண்டும். மேலும் சிதம்பராபுரம் மலையடிவாரப்பகுதியில் உள்ள விளைநிலங்களில் யானை உட்பட காட்டு விலங்குகள் புகாமல் இருக்க நிரந்தரமாக மின் வேலி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கருவேல மரங்களை விட கரும்புக்கு விலை குறைவு



திருப்பூர்: கூலியாட்கள் பற்றாக்குறையால், ஓராண்டு பயிரான கரும்பு சாகுபடிக்கு நடவு, வெட்டுக்கூலி, களையெடுப்பதற்கான தினக்கூலி, கான்ட்ராக்ட் அடிப்படையில் கூலி வழங்கப்படுகிறது. சர்க்கரை ஆலைகளுடன் ஒப்பந்த அடிப்படையில், கரும்பு வளர்க்கப்படுகிறது. சீனியாரிட்டி பார்ப்பதால் ஓராண்டை கடந்தும், விளைந்த கரும்பு வெட்டப்படாமல், காய்ந்து எடை குறைகிறது. ஒரு டன் 2,350 ஆக விலை நிர்ணயிக்கப்படுகிறது. பருவ மழை பொய்த்து விட்டதால், ஏக்கருக்கு 50 டன் கிடைக்கிறது. விளைச்சல் குறைந்துள்ளதால் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. வேலி, தரிசு நிலங்களில் தானாக விளையும் சீமை கருவேல மரங்களுக்கு உள்ள கிராக்கி கரும்புக்கு இல்லை. செங்கல் சூளை, கரி மூட்டம் போடுபவர்களால் சீமை கருவேல மரம் ஒரு டன் 3,000 ரூபாய்க்கு மேல் வாங்கப்படுகிறது.இதுகுறித்து கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் கூறியதாவது: கரும்புக்கு நடவு, உரம், நீர் பாய்ச்சுவது, களையெடுப்பு, வெட்டு கூலி என செலவு

போக, ஒரு டன்னுக்கு 500 ரூபாய் கூட கிடைப்பதில்லை. கரும்பு சாகுபடி செய்வதற்கு பதில் சீமை கருவேல மரங்களை வளர்க்கலாம் என்றனர்.

## தயாராகிறது மசோதா நிலத்தடி தண்ணீருக்கும் இனி விலை



சென்னை : பயன் பாட்டின் அடிப்படையில் தண்ணீருக்கு விலை நிர்ணயிக்க வேண்டும். தண்ணீரை வர்த்தகப்பொருளாக கருத வேண்டும்; விவசாயத்துக்கு நிலத்தடி நீரை மானிய விலையில் வழங்கலாம் என்ற அதிரடிகளை மத்திய அரசு கொண்டு வர உள்ளது. தேசிய நீர் வள கவுன்சில் கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் டெல்லியில் நடந்தது. இந்த கூட்டத்தில் தேசிய நீர் சட்ட வரைவு கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட வரைவில் விவசாயிகளுக்கு பாதகமான பல அம்சங்கள் இடம் பெற்றிருப்பதால் நாடெங்கிலும் இதற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தண்ணீ ரின் தேவை அதிகரித்துள் ளது. தொழிற்சாலைகள் உபயோகிக்கும் தண்ணீரின் தேவை உயர்ந்துள்ளது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் விரைவாக குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் மட்டத் தை பாதுகாக்க வேண்டி யது அரசுகளின் கடமை யாகும். அதனால் தேசிய நீர் வளக் கொள்கை, 2012 அறிமுகப்படுத்தப்படுகிறது.சட்ட வரைவு குறித்து ஏற்கனவே தேசிய தண்ணீர் கொள்கையை மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த தண்ணீர் கொள்கையில் இடம் பெற்றுள்ள அம்சங்கள் வருமாறு:

* தண்ணீரை பாது காக்கும் வகையில் ஒவ்வொரு மாநில அரசும் தண்ணீர் ஒழுங்கு முறை ஆணையம் என்ற ஆணையத்தை அமைக்க வேண்டும். இந்த ஆணையம் தண்ணீருக்கு கட்டணம் விதிக்க வேண்டும். பயன்பாட்டுக்கு ஏற்ப தண்ணீருக்கு கட்டணம் வசூலிக்க வேண்டும்.

*  இந்த கட்டண விகிதம் ஆண்டுதோறும் மாற்றப்பட வேண்டும். நிலத்தடியிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரின் அளவுக்கு ஏற்ப கட்டணங்கள் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

* அந்தந்த பகுதிகளில் '' தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கம்'' என்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அந்த அமைப்பினர், பயன்படுத்தப்படும் தண்ணீருக்கான கட்டணத்தை வசூலிக்க வேண்டும். அவரவர் எல்லைக்குள் தண்ணீர் வழங்கும் முகமையாக இவர்கள் செயல்பட வேண்டும்.

* ஆற்றுப்படுகைகள், நீர்நிலைகளின் கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும். நீர்நிலைகளில் உள்ள எல்லா ஆக்கிரமிப்புகளையும் அப்புறப்படுத்தி, நீர் நிலைகளில் நீர் சென்று சேர வழிவகை செய்ய வேண்டும்.

* தண்ணீர் மாசுபடுவதை தவிர்க்க வேண்டும். தண்ணீரின் நீரோட்ட கோணத்தை மாற்றக்கூடாது. நிலத்தடி நீர் மட்டம் உயர்வதை உறுதி செய்ய வேண்டும். அணைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அதற்கான சரியான திட்டமிடல்கள் இருத்தல் வேண்டும்.வறட்சி மற்றும் வெள்ளக்காலங்களில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள், குடிநீர் விநியோகம் போன்ற கருத்துகள் நீர் கொள்கை 2012 ல் இடம் பெற்றிருந்தது.

இதுகுறித்து கடந்த சில நாட்களுக்கு முன் டெல்லியில் நடந்த தேசிய நீர் வளக்கூட்டத்தில் விவாதம் நடந்தது. இதில் தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் பேசும்போது, தண்ணீருக்கு விலை நிர்ண யம் செய்யக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

விவசாயிகளுக்கு பலத்த அடி

தண்ணீரை சிக்கனமாகவும் முறையாகவும் பயன்படுத்த நீர்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி தண்ணீரை வர்த்தக பொருளாக கருதலாம். தண்ணீர் குறித்த சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு இருந்தாலும் தேசிய அளவிலான பொதுக் கொள்கை உருவாக்கப்படும். அதே நேரம் மாநில அரசின் விவகாரங்களில் மத்திய அரசு தலையிடாது. தண்ணீரை விநியோகிக்கும் உரிமை தனியாருக்கு வழங்கப்படும் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டு சட்ட முன் வடிவை அரசு வகுத்துள்ளது.

இந்த சட்ட முன் வடிவுகள் சட்டமானால் நாம் பயன்படுத்தும் தண்ணீருக்கும் பணம் கட்ட வேண்டும் என்பதும், தண்ணீர் விநியோகம் தனியார் மயமாகும். இந்த முடிவு விவசாயிகளுக்கு பலத்த அடி என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்
03.01.2013 A.M

## மழை பொய்த்ததால் மஞ்சள் உற்பத்தி பாதிப்பு; விலை உயரும் அபாயம்

தூத்துக்குடி,

தூத்துக்குடி மாவட்டத்தில் மழை பொய்த்ததால் மஞ்சள் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மஞ்சள் சாகுபடி

பொங்கல் பண்டிகையின் போது புதுப்பானையில், புது அரிசியிட்டு பொங்கலிடுவது வழக்கம். அப்போது மஞ்சள் குலை, கரும்பு ஆகியவற்றை படைத்து மக்கள் பொங்கல் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர். கரும்பு பெரும்பாலும் மதுரை மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடிக்கு கொண்டு வரப்படுகிறது.

அதே போன்று மஞ்சள் தூத்துக்குடி மாவட்டத்தில் பயிரிடப்பட்டு வருகிறது. தூத்துக்குடி அருகே உள்ள தங்கம்மாள்புரம் பகுதியில் ஆண்டுதோறும் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. ஆனால் தூத்துக்குடி மாவட்டத்தில் போதுமான மழை பெய்யாததால் மஞ்சள் விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் விலை உயர வாய்ப்பு உள்ளது.

விலை உயரும்

இது குறித்து மஞ்சள் சாகுபடி செய்து உள்ள விவசாயி கூறும் போது, கடந்த ஆண்டு ஒரு மஞ்சள் ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு போதுமான மழை இல்லாததால் விளைச்சல் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக ஒரு மஞ்சள் ரூ.30 முதல் 50 வரை விற்பனை செய்ய வாய்ப்பு உள்ளது. அப்போதுதான் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு இழப்பு ஏற்படாது என்று தெரிவித்தார்.

## மோட்டார்சைக்கிள் என்ஜின் உதவியுடன் கரும்பு கணு வெட்டும் முறை சென்னிமலை விவசாயி கண்டுபிடிப்பு

ஈரோடு

சென்னிமலை அருகே மோட்டார்சைக்கிள் என்ஜின் உதவியுடன் விவசாயி ஒருவர் விதை கரும்பு கணுக்களை வெட்டி வருகிறார்.

### அதிக மகசூல்

சென்னிமலை அருகே மோட்டார்சைக்கிள் என்ஜின் உதவியுடன் விவசாயி ஒருவர் விதை கரும்பு கணுக்களை வெட்டி வருகிறார். இதனால் செலவு குறைவதுடன் நேரமும் மிச்சம் ஆவதாக தெரிவிக்கிறார். விவசாயிகள் தற்போது பல இடங்களில் கரும்பு பயிரிட பழைய முறையான கரும்பு கரணைகளை வெட்டி பயிரிடாமல் புதிய முறையான ஒரு பரு நாற்று நடுதல் முறையை பயன்படுத்தி வருகின்றனர். அதாவது பழைய முறையில் பயிரிட கரும்பின் முளைப்பு பகுதியுடன் சுமார் ஒரு அடி நீளத்திற்கு கரும்பை வெட்டி அதை விதை கரணையாக பயன்படுத்துவார்கள். அப்படி பயிரிட ஒரு ஏக்கருக்கு சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கரணைகளை பயன்படுத்துவார்கள். ஆனால் புதிய முறையான ஒரு பரு நாற்று பண்ணை முறை மூலம் கரும்பு பயிரிட்டால் கரும்புகளின் எண்ணிக்கை குறைவதுடன் அதிக மகசூலும் கிடைக்கும் என்பதால் தற்போது பெரும்பாலான விவசாயிகள் இந்த முறையை கையாண்டு வருகின்றனர்.

### மோட்டார்சைக்கிள் என்ஜின்

முறையான ஒரு பரு நாற்று பண்ணை அமைக்க முதலில் கரும்பின் முளைப்பு பகுதியை மட்டும் தனியாக வெட்டி எடுக்க வேண்டும். அப்படி தனியாக வெட்டி எடுக்க பல இடங்களில் மின் மோட்டார் உதவியுடன் விவசாயிகள் கூலி ஆட்களை வைத்து வெட்டுகிறார்கள். அப்படி வெட்ட மின் செலவு மட்டுமின்றி மின் தட்டுப்பாடும் ஏற்படுகிறது. அந்த கவலையை போக்கும் வகையில் சென்னிமலை அருகே சொக்கநாதபாளையத்தை சேர்ந்த தங்கவேல் என்ற விவசாயி தனது தோட்டத்தில் கரும்பு விதை கணுக்களை இரு சக்கர வாகனமான மோட்டார்சைக்கிள் என்ஜினை பயன்படுத்தி வெட்டி வருகிறார்.

இது குறித்து விவசாயி தங்கவேல் நம்மிடம் கூறியதாவது...

### மணிக்கு 2 ஆயிரம் கணுக்கள்

நான் வீட்டு மின்சாரம் மூலம் மோட்டாரை பயன்படுத்தி கரும்பு விதை கணுக்களை வெட்டி வந்தேன். கடந்த மாதம் மின்சார வாரிய அதிகாரிகள் ஆய்வு செய்து இது போன்ற செயல்களுக்கு வீட்டு மின்சாரத்தை பயன்படுத்துவது குற்றம் எனக்கூறி எனக்கு ரூ.51 ஆயிரம் அபராதம் விதித்தனர். மேலும் இதுமாதிரி மின்சாரத்தை பயன்படுத்தக்கூடாது என அறிவுரையும் கூறினார்கள். அதன்பிறகு விதை கணுக்களை எப்படி வெட்டுவது என யோசித்தேன்.

அதன் விளைவாக என்னுடைய டீசல் புல்லட் ஞாபகம் வந்தது. அதன் உதவியுடன் வெட்டி வருகிறேன். புல்லட் என்ஜினுக்கு ஒரு மணி நேரத்திற்கு அரை லிட்டர் டீசல் செலவு ஆகிறது. மேலும் மணிக்கு 2 ஆயிரம் கணுக்களை வெட்டலாம். ஆள் மூலம் வெட்டினால் 500 கணுக்களுக்கு குறைவாகவே வெட்ட முடியும். கமர்சியல் மின் இணைப்பு பெற்று மோட்டார் மூலம் வெட்டினால் கூடுதல் செலவு ஏற்படுவதுடன் அடிக்கடி மின் வெட்டும் வருவதால் ஆள் கூலிதான் வீணாக போகிறது. அதனால் இது போன்ற முறையை மற்ற விவசாயிகளும் பயன்படுத்தினால் நேரம் மிச்சம் ஆவதுடன் செலவும் குறைகிறது. மின்சாரத்தையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை என்றார்.